# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 113** **நாள்: 21.02.2026**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், ராதாகிருஷ்ணன் தெருவில் ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை இன்று திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட பாண்டி பஜார், ராதாகிருஷ்ணன் தெருவில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்க நிதி மற்றும் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை இன்று (21.02.2026) திறந்து வைத்தார்.

இந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் சுமார் 560 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் வாகன நிறுத்துமிடம், தரைத் தளத்தில் 2 மருத்துவ அலுவலர் அறைகள், அவசர சிகிச்சைப் பிரிவு, மருந்தகம், ஆய்வகம், தடுப்பூசி போடுமிடம், காசநோய்ப் பரிசோதனை செய்யுமிடம், காத்திருப்பு அறை, ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறைகள், மின்தூக்கி வசதி. முதல் தளத்தில் செவிலியர் ஓய்வறைகள், காத்திருப்பு அறை, பதிவறை, குளிருட்டப்பட்ட மருந்துகள் வைப்பு அறை, கழிவறை வசதி, மின்னனாக்கி மற்றும் மின் வசதிகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் தியாகராய நகர் பகுதி பொதுமக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர் திரு.கே.ஏழுமலை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**